Under Section 173 BNSS பா.நா.சு. பா.ச. பிரிவு 173ன் கீழ்

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101990

1. District மாவட்டம் : மதுரை PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 01/2025 Date: நாள் 28-1-25

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: பிரிவு 7(a)
   (ii) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 27-1-2025 / 15.00 hrs. 2) 28-1-2025 / சுமார் 10.45 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28-1-2025 Time : நேரம் 12.40 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28-1-2025 Time : நேரம் 13.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 45 Km தென் மேற்கு, சார்பதிவாளர் அலுவலகம், உசிலம்பட்டி
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. மணிராஜா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. அழகப்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/25 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் செங்கல் சூளை பணியாளர் (g) Address : முகவரி கதவு எண் 4/751, தெற்கு தெரு, T.தொட்டப்பட்டி, தொட்டப்பநாயக்கனூர் அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஜெயகாந்தன், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Malinga 28/01/2025

L. Bharathi 28-1-25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28-1-25 / 13:05 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police No. எண்
V4AC, Madurai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 28.01.2025-ஆம் தேதி மதியம் 12.15 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, உசிலம்பட்டி தாலுகா தொட்டப்பநாயக்கனூர் அஞ்சல் T. செட்டியபட்டி தெற்கு தெரு கதவு எண் 4/751-ல் வசிக்கும் அழகப்பன் மகன் மலைராஜா என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் அ. மலைராஜா, த/பெ. அழகப்பன், கதவு எண்.4/751, தெற்குதெரு,T. செட்டியபட்டி, தொட்டப்பநாயக்கனூர் அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம் பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் T. செட்டியபட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் M.Phil., படித்துமுடித்துவிட்டு தற்போது அரசு தேர்வுகளுக்கு படித்து கொண்டிருக்கின்றேன். எனது தாத்தா பாண்டிக்கோனார் மற்றும் எனது பாட்டி அரசம்மாள் ஆவார்கள். அவர்கள் இருவரும் காலமாகிவிட்டார்கள். எனது அப்பா அழகப்பன் எனது தாத்தா பாட்டிக்கு நான்காவது பிள்ளை ஆவார். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் எட்டு பேர் ஆவார்கள். அவர்கள் முறையே திரு.ராசு, திரு.மலைச்சாமி, எனது அப்பா திரு.அழகப்பன், திரு.செண்பகன், திரு.வெள்ளைச்சாமி, திருமதி.ராக்கம்மாள், திருமதி.முத்துபிள்ளை, திருமதி.பரமேஸ்வரி மற்றும் திருமதி.அழகம்மாள் ஆவார்கள். அதில் எனது பெரியப்பா ராசு என்பவர் காலமாகி விட்டார். அவருக்கு வாரிசுதாரராக அவரது மனைவி திருமதி.அரசம்மாள், அவரது மகன் செல்வம் மற்றும் மகள்கள் செல்வராணி, கவிதா ஆகியோர் உள்ளனர். எனது சித்தப்பா வெள்ளைச்சாமி என்பவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. எங்கள் ஊர் தொட்டப்ப நாயக்கனூரில் வருவாய் கிராம புல எண். 205 / 7D -ல் எனது தாத்தா பாண்டிக்கோனார் பெயரிலும், புல எண். 205 / 7E -ல் எனது பாட்டி அரசம்மாள் பெயரிலும் உள்ள மொத்தம் 4 செண்ட் காலிமனையிடம் உள்ளது. அதை எங்கள் குடும்பத்தினர் எங்களுக்குள் பாகபிரிவினை செய்து கொள்வதற்கு முடிவு செய்திருந்தார்கள். அதன் பிரகாரம் அந்த நான்கு செண்ட் காலிமனையிடத்தில் எனது பெரியப்பா திரு.ராசு அவர்களின் மனைவி அரசம்மாள், அவரது மகன் செல்வம், அவரது மகள்கள் செல்வராணி, கவிதா ஆகியோருக்கு 1029 சதுரடி காலிமனையிடமும், எனது மற்றொரு பெரியப்பா மலைச்சாமி, எனது அப்பா அழகப்பன் மற்றும் எனது சித்தப்பா செண்பகன் ஆகியோருக்கு தலா 365 சதுரடி காலிமனையிடம் பிரித்து கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது. அதற்கு எனது அத்தைகள் ராக்கம்மாள், முத்துப்பிள்ளை, பரமேஸ்வரி, அழகம்மாள் மற்றும் எனது சித்தப்பா வெள்ளைச்சாமி ஆகியோர் ஒத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு அதற்காக எங்களது பொதுகுடும்ப நிதியிலிருந்து ரூ.50,000/- ரொக்கம் கொடுக்கப்பட்டது. அதன்படி மேற்படி பாக பிரிவினை முறையாக பதிவு செய்வதற்காக நேற்று (27.01.2025) காலை சுமார் 10.00 மணியளவில் எனது தந்தை என்னை

அழைத்துகொண்டு உசிலம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள ஆவண எழுத்தர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த ஆவண எழுத்தர் திருமதி.வெண்ணிலா என்பவரை சந்தித்து அவரிடம் விவரம் கூறினோம். அவர் எங்களிடம் சொத்து பத்திரத்தின் நகலை தரும்படி கேட்டார். நான் சொத்து பத்திரத்தின் நகலை அவரிடம் தந்தேன். அதனை பார்த்துவிட்டு அவர் எங்களுக்கான நான்கு பாகபிரிவினை பத்திரத்தை அவரே தயார் செய்து தருவதாகவும், அதற்காக அரசு செலுத்த வேண்டிய முத்திரைதாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் மற்றும் அவர் பத்திரம் தயார் செய்வதற்கான கூலி என சேர்த்து மொத்தம் ரூ.20,000/- தர வேண்டும் எனக்கேட்டார். எனது அப்பா அவர் கேட்டுக்கொண்டபடி ரூ.20,000/- தந்தார். பிறகு திருமதி.வெண்ணிலா அவர்கள் எங்களுக்கு நான்கு பத்திரங்களை தயார் செய்தார். பிறகு அதனை உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக பதிவேற்றம் செய்து அதற்கான (டோக்கன்) முன்பதிவு செய்தற்கான ஒப்புகை சீட்டு தற்காலிக எண்.TP/207969619/2025 Token No.3, Time : 15.00 – 15.30 hours-ன் படி முன்பதிவு செய்து, அதற்கு முத்திரைவில்லை மற்றும் பதிவு கட்டணம் செலுத்திவிட்டதாக எங்களிடம் திருமதி.வெண்ணிலா கூறினார். பிறகு அதன் பின்னர், மதியம் சுமார் 03.00 மணியளவில் எனது குடும்பத்தினர் சார்பாக நானும், ஆவண எழுத்தர் திருமதி. வெண்ணிலா அவர்களும், எங்களது பாகப்பிரிவினை பத்திரத்தை உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு மேற்கொள்வது சம்பந்தமாக அந்த அலுவலகத்திற்கு உள்ளே சென்று அங்கு பணியில் இருந்த சார்பதிவாளர் திரு. ஜியாவுதீன் அவர்களை சந்தித்தோம். திருமதி.வெண்ணிலா அவர்கள் எங்களின் பத்திரங்களை பற்றி விவரங்களை கூறி அவர் தயார் செய்து வைத்திருந்த நான்கு பத்திரங்களையும் திரு.ஜியாவுதீன் அவர்களிடம் கொடுத்தார். அவர் எங்களின் பத்திரங்களை பார்த்துவிட்டு என்னிடம் எங்களது குடும்ப சொத்து தொடர்பான உரிமை ஆவணங்களில் நிலத்தின் பரப்பளவு 4 செண்ட் மட்டும் தான் குறிப்பிடப்பட்டு உள்ளதாகவும், அதனை பற்றி சதுரடியில் குறிப்பிடவில்லை என்றும், ஆனால் நாங்கள் தயாரித்த நான்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் நிலத்தின் பரப்பளவு சதுர அடி கணக்கில் குறிப்பிடப்பட்டு பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என குறை கூறி, நாங்கள் தாக்கல் செய்த நான்கு பாகப்பிரிவினை ஆவணத்தை பதிவு செய்து எங்களிடம் அவ்ஆவணங்களை வழங்குவதற்கு 1 செண்டிற்கு தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் 4 செண்டிற்கு ரூ.40,000/-த்தை அவரது செலவுக்கு தருமாறு கேட்டார். அப்போது நான் அவரிடம் பாகப்பிரிவினை பதிவு மேற்கொள்வதற்கான அரசுக்கட்டணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செலுத்தியுள்ளேன். பிறகு எதற்கு தங்களுக்கு தனியாக செலவுக்கு பணம் கொடுக்க வேண்டும் என சொன்னேன். அதற்கு சார்பதிவாளர், திரு. ஜியாவுதீன் அவர்கள் தனக்கு செலவுக்கு தரவேண்டிய பணம் ரூ.40,000/-த்தை கொடுத்தால்தான் உங்களது பாகப்பிரிவினை பத்திரத்தை பதிந்து கொடுக்க முடியும் என கறாராக கூறினார். பின்னர், சார்பதிவாளர் அலுவலகத்தை விட்டு நான், ஆவண எழுத்தர் திருமதி. வெண்ணிலா அவர்களுடன்

வெளியே வந்து, வெளியில் காத்திருந்த எனது குடும்ப உறுப்பினர்களிடம் பாகப்பிரிவினை பத்திரத்தை உசிலம்பட்டி சார்பதிவகத்தில் பதிவு செய்ய, சார்பதிவாளர் ஜியாவுதீன் ரூ.40,000/- இலஞ்சமாக கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு அவர்கள் அனைவரும் நாமே குறைவான அளவு இடத்தைதான் பாகப்பிரிவினை செய்து பதிந்து கொள்கிறோம். அதற்கே சார்பதிவாளர் ஜியாவுதீன் அவர்கள் பணம் கேட்கிறாரே என வருத்தப்பட்டார்கள். பிறகு நான் சார்பதிவாளர் ஜியாவுதீன் கேட்டுக்கொண்டபடி பணம் கொடுக்க காலதாமதம் ஆனதால், அவ் ஆவணங்களை பதிவு செய்ய இயலவில்லை எனத்தெரிவித்துவிட்டார்கள். பின்னர், ஆவண எழுத்தர் திருமதி. வெண்ணிலா அவர்கள் மீண்டும் புதியதாக பத்திரத்தை பதிவு செய்ய நாளை முன்பதிவு செய்து புதிய ஒப்புகை சீட்டு பெற வேண்டும் என சொன்னார். நாங்களும் சரியென கூறிவிட்டோம். பின்னர் அதன்படி இன்று (28.01.2025) காலை 10.00 மணிளவில் திருமதி.வெண்ணிலா அவர்களை நாங்கள் அவரது அலுவலகத்தில் சந்தித்து எங்களது பத்திரத்தை பதிவு செய்வதற்காக கேட்டுக்கொணடோம். அதற்காக அவர் எங்களுக்கான முன்பதிவு செய்வதற்கான ஒப்புகை சீட்டை தற்காலிக எண். TP/ 208126538/2025 Token No.02, Time : 14.00 – 15.00 hours-ன் பிரகாரம் பெற்றுள்ளதாக கூறி அதற்கான ரசீது நகலை என்னிடம் கொடுத்தார். பிறகு நான் கேட்டுக்கொண்டதன் படி திருமதி.வெண்ணிலா மற்றும் எனது சித்தப்பா மகன் மூர்த்தி ஆகியோருடன் உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சுமார் 10.45 மணிக்கு சென்று அங்கிருந்த சார்பதிவாளர் திரு.ஜியாவுதீன் அவர்களை நேரில் சந்தித்து, இன்றாவது பதிந்து தாருங்கள் என்று அவரிடம் நான் கேட்டேன். அப்பொழுது, திருமதி.வெண்ணிலா அவர்கள் அவரிடம் எங்களுக்கான பத்திரங்களை பதிவு செய்வதற்காக முன்பதிவு விவரத்தை கூறிவிட்டு சென்றுவிட்டார். திரு.ஜியாவுதீன் அவர்கள் என்னிடம் உங்களது பத்திரங்களை பதிவு செய்வதற்காக நான் கேட்ட பணம் ரூ.40,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா எனக்கேட்டார். அதற்கு நான் அவரிடம் குறைவான அளவு இடத்தைதான் பாகப்பிரிவினை செய்து பதிந்து கொள்ள போகிறோம், எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கஷ்டப்பட்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள், எனக் கூறி அவர் கேட்கும் பணத்தை குறைத்து கொள்ளும்படி கெஞ்சி கேட்டுக்கொள்ள அதற்கு அவர் சரி ஒரு பத்திரத்திற்கு ரூ.5000/- என மொத்தம் ரூ.20,000/- த்தை இன்று மதியத்திற்குள் என்னிடம் வந்து கொடுத்தால்தான் உங்கள் பத்திரத்தை பதிவு செய்து அதனை உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்வேன் என கண்டிப்பாக கூறிவிட்டார். பிறகு நான் இதககவலை எனது குடும்ப உறுப்பினர்களிடம் தெரிவித்தேன். அவர்களுக்கு இலஞ்சம் கொடுப்பதில் விருப்பமில்லை. எனது தந்தை மற்றும் எங்களது குடும்ப உறுப்பினர்கள் என்னிடம் உசிலம்பட்டி சார்பதிவாளர் திரு.ஜியாவுதீன் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் தகுந்த முத்திரைதாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்திய பின்பும், எங்களது குடும்ப உறுப்பினர்களின் பாகப்பிரிவினை பத்திரத்தை உசிலம்பட்டி

சார்பதிவகத்தில் பதிவு செய்ய, ரூ.20,000/- இலஞ்சமாக கேட்கும் சார்பதிவாளர் ஜியாவுதீன் அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். இந்த புகார் மனுவுடன் (1) எனது தாத்தா பாண்டிக்கோனார் அவர்களின் வாரிசுதாரர்கள் என்பதற்கான உசிலம்பட்டி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் நகல் (2) எனது தாத்தா பாண்டிக்கோனார் அவர்கள் பெயரில் உள்ள பட்டா எண்.2253-ன் நகல் (3) உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 27.01.2025-ம் தேதிக்கு முன்பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டு தற்காலிக எண்.TP/207969619/2025 -ன் நகல், (4) 27.01.2025-ம் தேதி இணைய வழியில் செலுத்தப்பட்ட அரசு கட்டண விபரத்தின் நகல் மற்றும் (5) உசிலம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 28.01.2025-ம் தேதிக்கு முன்பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டு தற்காலிக எண். TP/ 208126538/2025 -ன் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும், உசிலம்பட்டி சார்பதிவாளர் ஜியாவுதீன் அவர்கள் கேட்ட இலஞ்சப்பணம் ரூ.20,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX A. Malairaja 28/01/2025.

**Sir, Received the typed complaint today 28.01.2025 at 12.15 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the Accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, V&AC, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 01/2025 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 12.40 hrs and took up investigation. Sd./-XXXXXX (N. Bharathipriya) 28-1-25 Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. A. Malairaja, S/o. Alagappan, Door No.4/751, South Street, T. Chettiyapatty, Thottappa Naickanur Post, Usilampatti Taluk, Madurai District along with enclosures are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

28-1-25

**(N. Bharathipriya)**
**Inspector of Police,**
**V&AC, Madurai.**